பேரளம் காவல் நிலையத்துக்குட்பட்ட வழக்குகள்.

*வினா எண் 126—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் ஒன்றியம் பேரளம் காவல் நிலையத்தின் எல்லைக்குட்பட்ட வழக்குகளை மாயவரம் நீதிமன்ற எல்லைக்குக் கொண்டுவர அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 9-30)

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) Yes.

(b) Orders have been issued in G.O. Ms. No. 1485, Home, dated 16th June 1979 for the transfer of the jurisdiction of the Peralam Police Station from the Court of the Sub Divisional Judicial Magistrate, Nagapattinam, and of the Judicial Second Class Magistrate, Tiruvarur to the Courts of the Judicial First Class Magistrate and of the Judicial Second Class Magistrate at Mayuram.

திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள அடகுக் கடைக்காரர்கள்.

*வினா எண் 127—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலைப் பகுதியில் பான்புரோக்கர் கடை நடத்தியவர்கள் திடீர் என தலைமறைவாகி விட்டார்கள் என அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆமெனில், தலைமறைவாகிவிட்ட கடைக்காரர்கள் எத்தனை பேர் ?

(இ) அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) & (b) One Pawnbroker is reported to be absconding.

(c) Police Department has registered a criminal case against him. That Department is making all efforts to trace him and take action against him.

1979 நவம்பர் 7]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பான் புரோக்கர் தலைமறைவாகி விட்டார், அவர் பொதுமக்களின் நகைகளை எடுத்துச் சென்றதோடு அல்லாமல் பொதுமக்களிடத்திலே இருந்து அவர் நகைகளை வங்கியிலே வைத்திருப்பதாகவும் அவைகளை மீட்டுக் கொண்டு வருகிறேன் என்று சொல்லி அவர்களிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு தலைமறைவாகிவிட்டார். இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஒரு ஆண்டிற்கும் மேலாகிறது. இன்னும் இன்வெஸ்டி கேஷனிலே இருப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணத் தொகை அளிக்க அரசு முன் வருமா? தமிழ் நாட்டிலே பல பகுதிகளிலே இப்படிப்பட்ட குற்றங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்து இருக்கிறதா அல்லது எடுக்க இருக்கிறதா ?

THE HON. THIRU K NARAYANASWAMY: Every effort will be taken by the Police to get the criminal apprehended in due course of time, if not, as early as possible. The scheme for giving any relief to these disappointed pawners who have paid the pledged amounts is certainly not under the consideration of the Government. This note today before me does not mention about the other absconding pawn-brokers in the other parts of the State.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஏராளமாக நடந்து இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கிறவர்கள் ஓடாமல் இருப்பதற்குப் பொது மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY: In this country, fundamental rights give freedom of movement even for criminals (laughter). Government can only take steps to get them arrested whenever these criminal pawn-brokers, after committing crimes, flee the State for cheating the public.

திருவண்ணாமலை சாலையில் தொல்பொருள் ஆய்வு.

* வினா எண் 128—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் மலை சுற்றும் சாலையில் பண்டைக்கால சிற்பங்கள் எழுத்துக்கள் ஆகியவை தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் ஆய்வு செய்யப்பட்டதா ?